1974 மார்ச் 14]

கும்முடிப்பூண்டி பகுதியில் நீர் வழங்கல்.

*415. வினா— திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா ?

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், காணுபுத்தூர் அரிசனக் காலனியில் குழாய்க் கிணறு குடிநீர்த்திட்டம் நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கும்முடிப் பூண்டித் துணை வட்டம் சாணுப்புத்தூர் அரிசன காலனியில் குழாய் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு முதலில் குழாய்கிணறு நடப்பு ஆண்டிலேயே அமைக்க செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் சென்ற ஆண்டே தொடங்கப்பட்டும், இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, எப்போது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, குழாய்க் கிணறு திட்டத்திற்கு 5,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த போர் வெல்லிலிருந்து கிடைக்கின்ற தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கு உள்ளது தானு என்பதை கண்டறிவதற்காக கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிடு யூட்டுக்கு அனுப்பப்படும். அங்கே இருந்து பதில் கிடைத்தவுடன் அது குடிப்பதற்கு ஏற்ற நல்ல தண்ணீர்தான் என்று பதில் கிடைத்தால், திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

*416 வினா—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுபுழல் பேட்டை அரிசனக் காலனியில் குடிநீர்த் திட்டம் அமைப்பதில் காலதாமதம் ஆவதன் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுபுழல் பேட்டை அரிசனக் காலனியில் குடிநீர் வசதி அளிப்பதற்காக ரூ. 5,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு குழாய் கிணறு அமைக்க செங்கல்பட்டு மாவட்ட நல அதிகாரி நடவடிக்கை எடுத்து வருகிறுர். நடப்பு நிதிஆண்டில் வேலை முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் மாவட்ட நல அதிகாரி ஒருவரே இருந்து கவனிக்கவேண்டியிருப்பதுதான்.

அதுமட்டுமல்லாமல், இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் சில மெட்டிரீயல்ஸ் கிடைப்பதிலும் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, துரித நடவடிக்கை எடுப்பதற்கு, திட்டங்களை நிறைவேற்றும் அதிகாரத்தை ஒன்றியங்கள் அளவில் பகிர்ந்தளித்தும், தேவையான மெட்டீரியல்ஸ் உடனடியாக கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இத்திட்டத்தை தயார் செய்வது சூப்பர்வைசர். பிறகு அது ஹைவேஸ் ரூரல் ஒர்க்ஸில் பரிசீலனை செய்யப்படுகிறது. அதன் பிறகு ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட நல அதிகாரி இத்திட்டங்களை நிறைவேற்றுவதில்லை.

(பல உறுப்பினர்கள் கையை உயர்த்திக்கொண்டிருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாள்தோறும் அரிசன நலன்கள் பற்றிய கேள்விகள் வருகின்றன. அதை ஒரு பொதுவான கொள்கையாக்கி எல்லா உறுப்பினர்களும் கேள்விகள் கேட்கவேண்டுமென்பது தேவையில்லை. ஒவ்வொரு நாளும் வருகின்ற கேள்விகளில், அந்தந்த குறிப்பிட்ட பகுதிகளைப் பற்றி மட்டும் கேள்வி கேட்டால் போதும். இப்போது கும்முடிப்பூண்டி வட்டத்தைப்பற்றிய கேள்வி வருகிறது என்றால் அதைப்பற்றி மட்டும் கேட்கலாம்.

திரு ஏ. சுப்பிரமணியம் : தலைவர்வர்களே, தமிழகத்திலே இருக்கின்ற பல அரிசன குடியிருப்புகளுக்கு இன்னும் குடிதண்ணீர் வசதி இல்லை. பொதுக் கிணறுகளிலிருந்து அவர்கள் தண்ணீர் எடுப்பதற்கும் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் மாதத்திற்கு இத்தனை என்று தீர்மானித்து இவ்வாண்டு இறுதிக்குள் எல்லா அரிசன குடியிருப்புகளுக்கும் குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சில இடங்களில் கிணறுகள் வெட்டும்போது, அந்தக் கிணறுகளில் தண்ணீர் கிடைப்பதில்லை. சில இடங்களில் போர்வெல் போட வேண்டும். இத்திட்டங்கள் ஒரே அதிகாரியால் மட்டும் நிறைவேற்றப்படக்கூடியவை அல்ல. தாசில்தார் மூலமாக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். சூப்பர்வைசர் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். பிறகு ஹைவேஸ் ரூரல் ஒர்க்ஸிலிருந்து டெக்னிகல் சேங்ஷன் வரவேண்டும். அதன் பிறகுதான் ஒதுக்கப்பட்ட நிதியை ஒழுங்காகச் செலவிடவேண்டும். ஆகவே, திட்டங்களை நிறைவேற்றுவதில் சற்று தமாதம் ஏற்படுகிறது. கடந்த ஆண்டு 17 லட்சம் ரூபாய் இத்தகைய காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டு இருந்தாலும் ஏறத்தாழ 20 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறோம். ஆகவே, அரிசன மக்களுக்கு நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்த அரசு விரைவாக செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1974 மார்ச் 14]

திரு எஸ். வடிவேல்: தலைவரவர்களே, மின் விளக்கு வசதி இல்லாத அரிசன குடியிருப்புக்களே இருக்கக்கூடாது என்று ஒரு திட்டத்தைத் தீட்டி செயல்பட்டதைப்போல, குடிதண்ணீர் வசதி இல்லாத அரிசன குடியிருப்புக்களே இருக்கத் கூடாது என்ற முறையில் ஒரு தீவிரத் திட்டத்தைத் தயாரித்து, அதன்படி அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சுப்பிரமணியம் அவர்கள் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். உங்கள் கேள்விக்கும் அதே பதிலைத்தான் சொல்ல வேண்டும்.

திருப்பாச்சேத்தி அரிசன குடியிருப்பு.

*417—திரு த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் திருப்பாச்சேத்தியில் உள்ள அரிசனங்களுக்கு மயானம் இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம், எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இரண்டு மயானங்கள் உள்ளன.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, இந்தத் திருப்பாச்சேத்தியில் அரிசன மக்களுக்கு என்று தனியாக மயானம் இல்லை. பொது மயானத்திற்குச் சென்றால் தகராறு வரும் என்று சொல்லி அங்குள்ள அரிசன மக்கள் மனக் கிலேசம் ஏற்பட்டிருக்கிறது. அது கசப்பாக மாறுவதற்குள் அவர்களுக்குத் தனி மயானம் அமைத்துக்கொடுக்க வேண்டும். ஏற்கெனவே இருந்த மயானம் அரிசன காலனிக்கு இடம் எடுக்கும்போது சேர்த்து எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு மயானம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திருப்பாச்சேத்தியில் 106-2, 105-3 என்ற இரண்டு சர்வே நம்பர்களில் முறையே 42 செண்ட், 51 செண்ட், நிலம் மயானப் பூமியாக இருக்கிறது. அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். அது போதவில்லை என்ற நிலை வருமானால் வேறு புதிய நிலம் மயானத்திற்காக ஆர்ஜிதம் செய்யலாம்.

திரு. த. சோனையா: அமைச்சரவர்கள் இரண்டு இடங்களில் மயானம் இருப்பதாகச் சொன்னார்கள். திருப்பாச்சேத்தி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. நான் தினமும் அங்கு போய்வருகிறேன். அரிசனங்களுக்கு